**தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 2 - 2018**

---

தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 2 இன் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. ஏற்கனவே செயற்படும் மாத்தறை தொடக்கம் அம்பாந்தோட்டை வரையான தெற்கு அதிவேகப்பாதையினை (கொழும்பு தொடக்கம் மாத்தறை) விஸ்தரிப்பதனூடாக முன்மொழியப்பட்ட அம்பாந்தோட்டை சர்வதேச மைய அபிவிருத்தி செயற்திட்டம், அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகம் மற்றும் சர்வதேச விமான நிலையம் (மத்தளை) போன்றவற்றை இனைத்தல் செயற்திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் பகுதி 02 இன் கீழான பெலியட்ட தொடக்கம் வெட்டியா இலிருந்தான தெற்கு அதிவேகப்பாதையின் 26 கிலோமீற்றர் இனை நீடிப்பதற்காக மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 60,601.60 மில்லியனாக உள்ளதுடன், அதில் 85 சதவிகிதமான ரூபா 46,920 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 360.29 மில்லியனை சிவில் மற்றும் ஆலோசனை சேவைக்காக நிதியளிப்புச் செய்வதற்கு சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி இணங்கியிருந்தது. மிகுதி 15 சதவிகிதம் ஐ.அ.டொலர் 63.58 மில்லியன் இலங்கை ஹட்டன் தேசிய வங்கியினால் நிதியளிக்க உடன்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் பகுதி 02 இன் கீழான நடவடிக்கைகள் 2016 ஒக்டோபர் 28 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 ஒக்டோபர் 27 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| காணி சுவீகரிப்பு மீதான இழப்பீடு கொடுப்பனவில் தாமதத்திற்காக செலுத்த வேண்டிய வட்டிக்கான ஏற்பாடு இலங்கை கணக்கீட்டு நியமம் இல.08 இன் பிரகாரம் செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் குறைமதிப்பீடு. | இது நடைமுறை ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் - 08 இன் பிரகாரம் வழங்கப்படும். | ஏற்பாடுகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 08 இன் படி செய்யப்படல் வேண்டும். |

**2.2 சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2017 ஜுன் 27 ஆம் திகதிய முத்தரப்பினர் புரிந்துணர்வு ஒப்பந்தம். | 2019 திசெம்பர் 23 இல் செய்யப்பட்ட பௌதீக விஜயத்தின் படி முத்தரப்பினர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழான மூன்று வீதிகளின் நிர்மான நடவடிக்கைகள் பொதுமக்களிற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செய்யப்படாமையை வெளிப்படுத்தியது. | பீஆர்டிஏ, ஆர்டிஏ மற்றும் ஒப்பந்ததாரரினால் கையொப்பமிடப்பட்ட முத்தரப்பினர் உடன்படிக்கையின் கண்காணிப்பின் கீழ்வரும் ஆறு வீதிகளில் மூன்று வீதிகள் பீஆர்டிஏ விற்கு கையளிக்கப்பட்டிருந்தது. மீதமான மூன்று வீதிகள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியானதன் பின்னர் கையளிக்கப்படும். | பொதுமக்களிற்கான தொந்தரவுகளை தவிர்க்க உடன்பட்ட நிபந்தனைகளுடன் இணங்கி நடக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | ஒப்பந்த பொது நிபந்தனைகளின் உபபிரிவு 4.2. | செயலாற்றல் பாதுகாப்பு பத்திரமானது ஒப்பந்ததாரர்களின் அவர்களின் சொந்த செலவில் வழங்க வேண்டியிருந்தும், மொத்தமாக ரூபா 307 மில்லியன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்திற்கான கிரயத்தினை மீளப்பெற்றுக் கொள்ள ஒப்பந்ததாரரிற்கு செலுத்தப்பட்டிருந்தது. | செயலாற்றல் பாதுகாப்பு பத்திரமானது அவர்களின் சொந்த கிரயத்தில் வழங்கவேண்டும் என ஒப்பந்த நிபந்தனை கூறுகின்ரது, அதாவது செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை சமர்ப்பிப்பது தரப்பினர்களிடையே ஓர் ஒப்பந்தத்தில் நுழைவதற்கு ஓர் முன் நிபந்தனையாகும், அதன் பிறகு ஒப்பந்ததாரர் ஒப்பந்த பீஒகியுவ் இன் பிஎஸ் உருப்படி 107(2) இன் கீழ் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்திரத்திற்கான செலவினை பெற உரிமை உண்டு. | அளவைப்பட்டியல்களின் மீளாய்வு கூறுவிலை ஆவணங்களை வழங்க முன்னர், பெறுகை நிபுனர்கள் மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவால் செய்யப்படல் வேண்டும். |

**3.** **பௌதீக முன்னேற்றம்**

------------------------------

**3.1** **செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

| இல | உருப்படி | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | பாதிக்கப்பட்ட மக்களைமீள குடியமர்த்தல். | செயற்திட்டமானது நெடுஞ்சாலை நிர்மானத்தினால் அவர்களது காணிகளை இழந்த மக்களிடையே பகிர்ந்தளிக்கவென ரூபா 18 மில்லியனிற்கு 2.0526 ஹெக்டயர் நீளமான (5ஏ.0ஆர்.11.43பி) காணியினை கொள்வனவு செய்திருந்தது. இருப்பினும், 9 பேர்ச் நீளமான ஒரு துண்டு காணி 2018 திசெம்பர் 31 வரை மீதமாக காணப்பட்டது. | பாதிக்கப்பட்ட மக்கள் மேலும் தீங்கிளைக்கப்படுவதுடன் தெளிவற்ற சூழ்நிலைக்கும் ஆளாவர். | அப்பயன்படுத்தப்படாத 9 பேர்ச் காணித்துண்டு பிரச்சினைகள் தீரும்வரை செயற்திட்டத்தின் கீழ் வைக்கப்பட்டிருந்தது. அக்காணியானது பாதிக்கப்பட்ட மக்கள் எவரினாலும் கேட்கப்படாவிடில் சமூக பயன்பாட்டிற்காக அது உரிய பிரதேச செயலகத்திற்கு கையளிக்கப்படும் | மீளகுடியமர்த்தல் செயன்முறையினை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | சிவில் நிர்மான வேலைகளை திட்டமிடல். | அதிவேகப்பாதையின் பிரிவு 03 மற்றும் 4 2019 நவம்பர் 7 இல் பொதுமக்களிற்காக திறக்கப்பட்டிருந்தும், இப்பிரிவின் நிர்மான வேலைகளின் மந்தகதியான வெயலாற்றல் காரணமாக பொதுமக்கள் உரிய அதிவேகப்பாதையினை பயன்படுத்துவதிலிருந்தான தன்மையினை இழந்திருந்தனர். | செயற்திட்டத்தின் ஆரம்ப கட்டத்திலான மந்தகதியான திட்டமிடல் அதிவேகப்பாதையினை முழுமையாக பயன்படுத்த பொதுமக்களிற்கு மேலும் அண்ணளவாக 6 மாதங்கள் காத்திருக்க வேண்டி ஏற்பட்டது | இலங்கை அரசாங்கம் மற்றும் சீனா எஸ்இம் வங்கி என்பவற்றிற்கிடையே கடன் உடன்படிக்கையினை கையொப்பமிடுவதில் தாமதத்தின் காரணமாக ஈஎஸ்ஈபி-02 இன் ஆரம்பிப்பானது தாமதமாக காணப்பட்டது. | எதிர்கால திட்டமிடலில் அனைத்து எதிர்பார்ப்புக்களையும் கருத்தில் கொண்டு பொதுமக்களிற்கு சிறந்த வெளியீட்டினை வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | இலக்கிடப்பட்டதற்கு எதிராக உண்மையான செயலாற்றல். | செயற்திட்டமானது நான்கு மாதங்கள் தாமதத்துடன் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2019 நவம்பர் 30 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் மற்றும் நிதிச்செயலாற்றல் முறையே 88.24 சதவீதம் மற்றும் 66.21 சதவீதமானதுடன் செயற்திட்டத்தின் உண்மையான செயலாற்றல் முறையே 86.75 சதவீதம் மற்றும் 60.84 சதவீதமாகவிருந்தது. எனவே, செயற்திட்டமானது எதிர்பார்த்த இலக்குகளிற்கு சற்று பின்னாக காணப்பட்டது. | ஒட்டுமொத்த பூர்த்தியாக்களில் தாமதத்திற்கும் செயற்திட்டத்தின் கிரயம் அதிகரிப்பிற்கும் சாத்தியம். | 2020 ஏப்ரல் 11 வரை கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் ஒப்பந்தாரரின் உண்மை செயலாற்றல் திட்டமிட்ட வேலைகளிற்கு சற்று பின்னால் காணப்பட்டது. | மீதி வேலைகளை விரைவபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | சேவை பிரிவுகளின் இட அமைவுகள் சாத்தியவள அறிக்கையின் அத்தியாயம் 8.33 இல் குறிப்பிடப்பட்டிருந்தும், அது பீஓகியுவ்வில் குறிப்பிடப்பட்டிருக்காததுடன் மேலும், தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் இற்காகான சேவை பகுதியினை நிர்மானிக்க எவ்வித திட்டமும் காணப்படவில்லை. மேலும், கொட்டாவ தொடக்கம் மாத்தறை வரையான தெற்கு அதிவேகப்பாதையின் 46 கி.மீ எனும் இடத்தின் பின்னர் பயன்பாட்டாளர்களிற்கு எவ்வித சேவை நிலையங்களும் காணப்படவில்லை. | வெளிபென்ன தொடக்கம் ஹம்பாந்தோட்டை வரையான 176 கி.மீ பயணிகள் போக்குவரத்து சேவையினை வழங்குவது பிரச்சினைக்குரிய நிலமையாகவிருக்கும். | சேவைப்பகுதி நிர்மானத்தை நோக்கி ஈஎஸ்ஈபீ ஒப்பந்தங்களில் எவ்வித பீஓகியுவ் ஏற்பாடுகளும் இல்லாததுடன் இது அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் சீனா எக்ஸிம் வங்கியிடமிரந்து ஒப்புதலை பெற்ற பின்னர் ஒப்பந்த சேமிப்பினை பயன்படுத்த ஒப்பந்த மாறலாக மேற்கொள்ளப்படல் வேண்டும். | தேவையான ஏற்பாடுகள் தெற்கு அதிவேகப்பாதை விஸ்தரிப்பு செயற்திட்டத்திற்கான சேவை பிரிவினை நிர்மானிக்க ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 இன் பிரகாரம், செயலாற்றல் பாதுகாப்பு பத்திரமானது ஒப்பந்ததாரர் வேலைகள் அமுலல்படுததப்பட்டு பூர்த்தி செய்யப்படும் வரையும் மற்றும் ஏதாவது குறைபாடுகள் இருப்பின் அதனை சரிசெய்யம் வரையும் செல்லுபடியாகவும் செயல்படுத்தக்கூடியதாகவும் உள்ளதா என ஒப்பந்ததாரர் உறுதிப்படுத்த வேண்டும். வழங்கப்பட்ட கால நீடிப்பின் அடிப்படையில், செயற்திட்டத்தின் குறைபாட்டு நிபர்த்தி செய்தல் காலம் 2021 ஏப்ரல் 11 இல் முடிவடைகின்றது. இருப்பினும், காணப்படும் செயலாற்றல் பத்திரம் 2020 ஜுன் 26 ஆம் திகதி வரையான காலப்பகுதியினை மாத்திரமே கொண்டுள்ளது. | குறைபாட்டு பொறுப்பு நிபர்த்தி காலப்பகுதியில் ஒப்பந்ததாரரினால் ஒப்பந்த நிபந்தனையினை மீறுவதனால் நட்டங்கள் ஏற்படக்கூடிய சாத்தியம். | செயலாற்றல் பாதகாப்பு பத்திரமானது அதன் காலாவதித் திகதி 2020 ஜுன் 26 இற்கு முன்னர் குறைபாட்டு பொறுப்பு காலப்பகுதி இறுதிவரை (2021.02.24 வரை) நீடிக்க அறிவுறுத்தல்கள் வழங்கப்படும். | செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தின் காலத்தினை நீடிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | ரூபா 18.6 மில்லியன் ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 14.7(ஆ) இன் பிரகாரம் இடைக்கால கொடுப்பனவு பட்டியல் இல 37 வரை தாமத கொடுப்பனவிற்கான வட்டியாக செலுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் மொத்த கிரயத்தின் அதிகரிப்பினை தவிர்க்க கூடும். | ஐபிசி 21, ஐபிசி 22, ஐபிசி 23 மற்றும் ஐபிசி 24 போன்றவற்றிற்கான கொடுப்பனவுகள் 2018 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஒதுக்கீடுகளின் போதாமை காரணமாக தாமதமாகவிருந்தது. மேலதிக ஒதுக்கீடுகள் மேற்கூறிய ஐபிசி கொடுப்பளவுகளின் இறுதி திகதியின் பின்னர் கிடைக்கப்பெற்றது. | வட்டி கிரயங்களை குறைக்க கொடுப்பனவுகளை உரிய நேரத்தில் செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | தொழிநுட்பவிபரக்குறிப்பின் பிரகாரம், அவ்விரண்டு பீஒகியுவ் உருப்படிகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பயன்படுத்தக்கூடியவைகளும், ஒப்பந்தமுடிவில் நல்லநிலையில் வேலை வழங்குனரிற்கு வழங்கப்படல் வேண்டும். இருப்பினும், நிலையான சொத்து பதிவேடு அனைத்து கொள்வனவு செய்யப்பட்ட உருப்படிகளும் சொத்து பதிவேட்டில் பதியப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்த பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து சொத்துக்களும் வேலை வழங்குனரிற்கு மாற்றப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்த இயலாததுடன் நிலையான சொத்துக்கள் தொடர்பாக பற்றாக்குறையான தகவல் சொத்துக்களை முறைகேடாக பயன்படுத்த வழிவகுக்கும். | நிலையான சொத்து பதிவேடு கணக்காய்வு நேரத்தின் போது முறையாக புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. நிலையான சொத்து பரிவேடு தேவையான தகவல்களுடன் உடனடியாக சீர்செய்யப்படும். | ஒரு நிலையான சொத்து பதிவேடு பராமரிக்கப்பட வேண்டியதுடன் முறையாக திருத்தம் செய்யப்படலும் வேண்டும். |
| (உ) | தொழிநுட்ப விபரக்குறிப்பின் வகுதி 03 இன் பிரிவு 01 சீஎல்.207.12 ஆனது சரியான வழியிலிருந்து (ROW) பெறப்பட்ட மூலப்பொருட்களிற்காக எவ்வித கட்டணமும் செலுத்தக்கூடாததென விசேடமாக கூறப்பட்டிருந்தும் ரூபா 10 மில்லியன் ஆர்ஓடபல்யூ(ROW) விற்கிடையேயான அகற்றப்பட்ட பாறைக்கான ராயல்டி கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. | உடன்படிக்கை நிபந்தனைகளிற்கு முறணாக செய்யப்பட்ட கொடுப்பனவுகள் காரணமாக செயற்திட்டத்தின் மொத்த கிரயத்தில் அதிகரிப்பு. | வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆர்ஓடபல்யூவிற்குள் பெறப்பட்ட தகுதியான மூலப்பொருட்களிற்கு கட்டணம் அறவிடப்படாமையை இது சுட்டிக்காட்டுகின்றது. 1992 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் சட்டத்தின் கீழ், ஜீஎஸ்எம்பீ ஆனது ஆர்ஓடபல்யூ விற்குள் பாறை அகழ்விற்காக சுரங்க உரிம பத்திரம் ஒன்றினை வழங்க ரோயல்டி கட்டணம் ஒன்றை அறவிடுகின்றது. | கொடுப்பனவுகள் ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் செய்யப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | ரூபா 7,454 மில்லியன் 2019 ஓகஸ்ட் இலான இடைக்கால கொடுப்பனவு பத்திர இல 37 வரை மாத்திரம் அனுமதிக்கப்பட்ட பீஓகியுவ் இற்கு மேலாக செலுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அவ் உருப்படிகளில், 32 உருப்படிகள் 100 சதவீதத்திற்கும் மேலான மாறல்களை காட்டுகின்றது. செயற்திட்டமானது பீஓகியுவினை மாற்றியமைக்க கூட நடவடிக்கை எடுத்திருக்காமை மேலும் அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தின் மொத்த கிரயம் அதிகரிப்பிற்கான சாத்தியம் மற்றும் நிதிகள் முறைகேடாக பயன்படுத்தக்கூடிய சாத்தியம். | வேண்டப்படாத அடிப்படையிலான வேண்டுகோளின் ஒப்பந்த பீஓகியுவ் ஒப்பந்ததாரர் நிதியளிப்பினை தேட ஒப்பந்தத்தினை கையளிப்பதற்கான ஆரம்பகட்ட கருத்துரு வடிவமைப்புக்களிலிருந்து தயாரிக்கப்பட்டிருந்தது. விபரமான வடிவமைப்பு கட்டத்தில், ஒப்பந்ததாரர் ஒப்பந்ததாரர் வேலை பரப்பிலிருந்தான பீஓகியுவ் அளவுகளில் மாறுபாடுகளை அவதானித்திருந்தார். | பீஓகியுவ் வினை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மதிப்பீடுகள் எதிர்காலத்தில் சரியாக தயாரிக்கப்படலும் வேண்டும். |
| (எ) | செயற்திட்டமானது 2019 நவம்பர் வரை வேலைகளின் 86.75 சதவீதத்தினை பூர்த்திசெய்திருந்தும், முகாமையானது 2019 திசெம்பர் 20 மற்றும் 17 இல் ஒப்பந்ததாரரிடமிருந்து தங்கல்ல – வீரகெட்டிய வீதியிலுள்ள இடமாறல் மற்றும் இரண்டு பிரிவினை கொண்ட 8 மேலதிக அதிவேகப்பாதை இடமாறலுடன் தொடர்புபட்ட அல்லது இணைந்த வீதிகளிற்கு விபரமான வரைபடம் மற்றும் மதிப்பீடுகளை கோரியிருந்தது. செயற்திட்டமானது அண்ணளவாக முடிவடையும் நேரத்தில் பாரியளவான நிர்மான வேலைக்கான வடிவமைப்பின் வேலைப்பரப்பினை மாற்றியமைப்பது கணக்காய்விற்கு கேள்விகுறியான ஒன்றாகும். | காணி சுவீகரிப்பு மற்றும் ஏனைய ஆரம்பகட்ட வேலைகளிற்கான மேலதிக கிரயங்கள் ஏற்படுவதற்கான சாத்தியம். | தங்கள – வீரகெட்டிய வீதிக்கான புதிய இடமாறல் ஒப்பந்ததத்தின் உண்மையான வேலைப்பரப்பில் இல்லை. அரசாங்கம் தங்கள பகுதியில் சுற்றுலாத் துறையினை ஆமுல்படுத்தவும் பொருளாதாரத்தினை அபிவிருத்தி செய்யவும் அதிவேகப்பாதையின் இணைப்பினை அதிகரிக்க தீர்மானித்தது. படிகமவின் புதிய ஐசி அப்பகுதியிலுள்ள சனத்தொகையின் நன்மைக்காக ஒப்பந்த சேமிப்பினை பயன்படுத்தி தீர்மானிக்கப்படும். | வேலைகளின் வேலைப்பரப்பானது செயற்திட்டத்தின் ஆரம்பகட்டத்தில் விபரமாக அடயாளப்படுத்தப்படல் வேண்டும். |

**3.3 வெளிக்கள விஜயத்தின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்**

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2019 திசெம்பர் 23 ஆம் திகதிய கணக்காய்வு விஜயம் வரை உருதிப்படுத்தப்படாமல் இரண்டு உறுதிப்படுத்தல் அல்லாத அறிக்கைகள் காணப்பட்டன. விபரம் கீழ்வருமாறு.<br><br>**வழங்கப்பட்ட திகதி** — **விபரம்**<br>2018 ஜனவரி 15 — தாகமுன்ன மீள்குடியமர்த்தல் காணியின் உள்ளக வீதி மீதான நிலக்கீழ் மேற்பரப்பு மீதான வெடிப்புக்கள்.<br>2019 ஓகஸ்ட் 10 — அவதானிக்கப்பட்ட வெயிப்புர பாதை. | திருத்த வேலைகளின் தாமதமானது வீதி நிலமையில் மேலதிக நேரத்திற்கு வழிவகுக்கும். | ஒப்பந்ததாரர் தற்போது வரை திருத்த வேலைகளை செய்திருக்கவில்லை. அதன்படி, கொடுப்பனவானது இரண்டு என்சீஆர்களிற்காக நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. பொறியியலாளர்கள் தோல்விக்கான காரணத்தினை விசாரணை செய்கின்றதுடன் அறிவுறுத்தல்கள் திருத்த வேலைகளிற்காக வழங்கப்படும் | திருத்த வேலைகளை விரைவாக செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |